Dina Thanthi , August 11, 2011

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் சார்பில்

# பள்ளி மாணவர்களுக்கு வினாடிவினா போட்டி

கோவை,ஆக.14–

தகவல் தொழில்நுட்ப சேவைகள், கன்சல்டிங் மற்றும் வர்த்தக தீர்வுகள் அளிப்பதில் முன்னணியில் உள்ள டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்(டி.சி.எஸ்.) பள்ளிகளுக்கு இடையே இந்திய அளவில் தகவல் தொழில்நுட்ப வினாடி வினா போட்டி நடத்துகிறது. இதன் ஒரு கட்டமாக 2011 டிசிஎஸ் ஐடிவிஸ் கோவை வினாடிவினா போட்டி வருகிற 25–ந்தேதி கோவை ஆர்.எஸ்.புரம், மாநகராட்சி கலையரங்கத்தில் நடைபெறுகிறது. போட்டியில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பங்கள் அந்தந்த பள்ளிகள் மூலமாக வருகிற 23–ந்தேதிக்குள் ஐடி விஸ் ஒருங்கிணைப்பாளர், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், விஷாலா, 51, காளிங்கராயர் தெரு, ஜி.ஜி.டிராவல்ஸ் வடக்கு, ராம்நகர், கோவை–9 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்த போட்டியில் 8–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் பங்கேற்கலாம். நுழைவு கட்டணம் கிடையாது.

டி.சி.எஸ் ஐடி விஸ் 2011 பிராந்திய சுற்றுக்கள் அகமதாபாத், ஐதராபாத், பெங்களூர், சென்னை, கோவை, புனே, கொல்கத்தா, புவனேசுவர், கொச்சி, லக்னோ, டெல்லி மற்றும் மும்பை ஆகிய 12 நகரங்களில் நடத்தப்படுகின்றன. பிராந்தியச் சுற்றுக்களை தொடர்ந்து டி.சி.எஸ் ஐடி விஸ் தேசிய சாம்பியன் பட்டத்துக்கான இறுதிச்சுற்று போட்டி வருகிற டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. கோவையில் நடக்கும் வினாடிவினா போட்டியில் வெற்றி பெறும் அணி தேசிய இறுதிச் சுற்றில் கோவை சார்பில் பங்கேற்கும். பிராந்திய சுற்றுக்களில் வெற்றி பெறுபவர்களுக்கு கேலக்சி டேப்லெட்கள், 2–வது இடம் பெறுபவர்களுக்கு ஐபாட் டச்கள் பரிசு மற்றும் கோப்பைகளும் அளிக்கப்படும். இறுதிச்சுற்றுக்கு தகுதி பெறும் 6 அணிகளுக்கும் டிராவல் பேக்குகள், ஹெட்போன்கள், ஸ்பீக்கர்கள், யுஎஸ்பி பென்டிராவ் உள்ளிட்டவைகளை டிசிஎஸ் இடமிருந்து பரிசாக வெல்வார்கள்.

திருபாரிடம் கூறுகையில், “வழிகாட்டி மதிப்பு திருத்தி அமைக்கும் பணி அக்டோபர் மாதம் 31–ந் தேதிக்குள் முடிக்கப்படும். அதன்பிறகு திருத்தப்பட்ட புதிய வழிகாட்டி மதிப்பு வெளியிடப்படும். இனிமேல் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் மாற்றி அமைக்கப்படும்'' என்று தெரிவித்தார்.